# நான் அரசன்

(சிறுவர் பாடல்கள்)



Dear Aunty!

from
Arasy. V

# நான் அரசன்

(சிறுவர் பாடல்கள்)


பாடல்களை ஆக்கியோர்:

மஹாகவி

மு.பொன்னம்பலம்

சு.வில்வரத்தினம்

ஓவியம்:

எஸ்.டி. சாமி



பாரதி வெளியீட்டகம்.

# நான் அரசன்
(சிறுவர் பாடல்கள்)

| | | |
|---|---|---|
| முதல் பதிப்பு | : | செப்டம்பர் 1995 |
| பதிப்பகம் | : | டெக்னோ பிரின்ட் |
| வெளியீட்டாளர் | : | வசந்தாதேவி கந்தசாமி |
| வெளியீடு | : | பாரதி வெளியீட்டகம்<br>23 றொபர்ட் வீதி,<br>தெஹிவளை. |

"இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் - பரந்து

கெடுக உலகியற்றியான் - வள்ளுவன்

# சமர்ப்பணம்


என் கணவருக்கு



## உள்ளடக்கம் ....


| | | |
|---|---|---|
| காலை கண்ணை விழிக்கிறேன் | - | மஹாகவி. |
| அம்மா தோசை சுடுகிறாள் | - | மஹாகவி |
| யார் பெரியோன் | - | மு.பொன்னம்பலம் |
| அம்புலியில் பூபாலன் | - | மு.பொன்னம்பலம் |
| விந்தை | - | மு.பொன்னம்பலம் |
| சின்னக்குருவி பறக்கிறது | - | மஹாகவி |
| மண் விளையாட்டு | - | சு.வில்வரத்தினம் |
| கண்ணென்றால் நாம் பார்க்கிறது | - | மஹாகவி |
| நெல்லை ஒருவன் விதைக்கிறான் | - | மஹாகவி |
| மழையே மழையே பொழியாயோ | - | மஹாகவி |
| ஒற்றைப் பனை | - | மு.பொன்னம்பலம் |
| அகதிச் சிறுவர் | - | மு.பொன்னம்பலம் |
| பேர்மனிதர் | - | மு.பொன்னம்பலம் |
| ஊர்க்குருவி, சொன்ன கதை | - | சு.வில்வரத்தினம் |
| வீடும் வெளியும் | - | சு.வில்வரத்தினம் |
| நான் அரசன் | - | மு.பொன்னம்பலம் |


*குறிப்பு: இதில் உள்ள பாடல்களை சிறுவர்களுக்கு அறிமுகப்படுத்தியபின் அப்பாடல்களுக்குரிய, படங்களுக்கு நிறம் தீட்டுவதற்கு சிறுவர்களை வழிநடத்துங்கள்.*



# காலை கண்ணை விழிக்கின்றேன்

காலை கண்ணை விழிக்கின்றேன்
கதவு திறந்து வருகின்றேன்
பாலைச் சிந்தி விட்டது போல்,
படியில் வெய்யில் வீழ்கிறது.

முற்றத்தினிலே பார்க்கின்றேன்,
முதல்நாள் இருந்த மொட்டொன்று
புத்தம் புதிய பூவாகப்
பூத்துச் சிரித்து நிற்கிறது.

நானே கையால் நட்ட செடி.
நானே தண்ணீர் வார்த்தசெடி,
ஆனபடியால் என்னைப் பார்த்
தங்கே நின்று சிரிக்கிறது.

இதற்கு மட்டும் பேசுவதற்
கியலாதிருந்த தின்றைக்கே
முதற்பூ பூத்தென் செவ்வந்தி
முன்னால் நின்று சிரிக்கிறது.

மிக்க வாசம் தருகிறதே.
மிகவும் மெத்தென் றிருக்கிறதே.
அக்காள் தலையிற் சூடிடவே
அதனை ஆய விடுவேனோ?

# அம்மா தோசை சுடுகின்றாள்

அம்மா தோசை சுடுகின்றாள்.
அருகில் ஓடிச் செல்கின்றோம்.
“சும்மா இருங்கள்” என்கின்றாள்
சுட்டுச் சுளகில் இடுகின்றாள்.

அடுப்பை நன்றாய் எரிக்கின்றாள்,
அகப்பை யினில் மா எடுக்கின்றாள்.
தடுக்கை நாங்கள் விரிக்கின்றோம்.
“தருவேன், பொறுங்கள்” என்கின்றாள்.

தட்டைக் கரண்டி பிடிக்கின்றாள்.
சரியாய்ப் பெரிய நிலவைப் போல்
வட்டத் தோசை சுடுகின்றாள்.
“வடிவாய்த் தின்பீர்” என்கின்றாள்.

சம்பல் அரைத்துத் தாளித்துச்
சட்டி நிறைய இருக்கிறது.
தம்பி, உண்ணத் தொடங்காயோ
சாப்பா டென்றால் விரும்போமா?



## யார் பெரியோன்?

உலகில் பெரியோன் ஆரென்று
ஒருவர் கேட்டார் நான் உடனே
"உலகை ஆளும் திறனுடையோன்
பெரியோன்" என்றேன் அவர் சிரித்தார்.

"சகல நூலும் கற்றறிந்த
அறிஞன் பெரியோன்" எனச் சொன்னேன்
மீண்டும் அதற்கு அவர் சிரித்தார்
மேலும் சிறிது சிந்தித்து

"பொருளின் இயக்கம் கண்டறிந்து
புதுமை காணும் விஞ்ஞானி
எவர்க்கும் பெரியோன்" எனச் சொன்னேன்
அதற்கும் மீண்டும் அவர் சிரித்தார்.

"ஏழை தாழ்ந்தோர் இவ்வுலகில்
இல்லாதிருக்க உழைப்பவனே
மேலோன்" என்றேன் ஈற்றினிலே
"மெத்தச் சரி" என்றவர் மகிழ்ந்தார்.





# அம்புலியில் பூபாலன்

பூபாலா பூபாலா எங்கே போனாய்?
பூமிக்கு அப்பாலே நானும் போனேன்.

பூமிக்கு அப்பாலே எங்கே போனாய்?
அம்புலியைப் பார்த்துவர நானும் போனேன்.

அம்புலியைப் பார்த்துவர எப்படிப் போனாய்?
அமெரிக்கா செய்துவிடும் கப்பலில் போனேன்.

அம்புலியில் என்னென்ன பார்த்து வந்தாய்?
பார்ப்பதற்கு அங்கொன்றும் இல்லை, ஔவைப்
பாட்டியாரும் நான்போக ஒளிந்து கொண்டாள்.


பாட்டி என்று நம்முன்னோர் எதனைச் சொன்னார்?
அம்புலியில் பாறைகளைக் கண்டு சொன்னார்.


அம்புலியில் நீ என்ன அறிந்து வந்தாய்?
அந்தரத்தில் நான் நின்றேன் கொஞ்ச நேரம்
காற்றில்லை, நீரில்லை, உணவுமில்லை
கதைப்பதற்கு ஆள்கூட அங்கே இல்லை!

ஆளில்லா ஊருக்கா இத்தனை போட்டி?
ஆளிருக்கும் ஊர்களுக்கு உதவி செய்வோம்.









# விந்தை

வெள்ளைப்பூவே வெள்ளைப்பூவே
எப்படி விரிகின்றாய்?
என்னைப் போல நீயும் சிரிக்க
எப்படிக் கற்றாயோ?

சின்னக்குருவி சின்னக்குருவி
எப்படிப் பறக்கின்றாய்?
உன்னைப் போல நானும் பறக்க
உபாயம் சொல்வாயோ?

பூனைக்குட்டி பூனைக்குட்டி
எப்படிப் பாய்கின்றாய்?
காலைத் தூக்கி நானும் பாயக்
கற்றுத் தருவாயோ?

ஆமைத் தம்பி ஆமைத்தம்பி
எப்படி நீந்துகிறாய்?
நீருக்குள்ளே மூச்சை யடக்கும்
யோகம் சொல்வாயோ?

சாமியரே, சாமியாரே
எங்கே அலைகின்றீர்?
சாமிப் பெரியோன் உனக்குள் உள்ளான்
காட்டித் தரவா சொல்?



# சின்னக்குருவி பறக்கிறது.

சின்னக்குருவி பறக்கிறது.
சிறகைக் காற்றில் உதைக்கிறது.
திண்ணைக் குந்தில் இருக்கின்றேன்
திரும்பிப் பார்த்துச் சிரிக்கிறது.

வெய்யில் நன்றாய் எறிக்கிறது.
வெளியிற் பயறு காய்கிறது.
பையக் குருவி வருகிறது
பயற்றுப் பாயை அடைகிறது.

என்னைப் பார்த்துக் கதைக்கிறதே.
ஏதோ கேள்வி கேட்கிறதே.
இன்னும் நாங்கள் பழகாத
இனிய சொற்கள் சொல்கிறதே.

“பயறு வேண்டும்” என்கிறதோ?
“பசிக்கின்றது, பார்” என்கின்றதோ?
“வயிறு சிறிய தானாலும்
வருத்தம் பெரிதே” என்கிறதோ?

பஞ்சம் வந்து சேர்ந்திடுமோ.
பத்துப் பயறு வீசுவதால்?
கொஞ்சம் கிள்ளி எறிகின்றேன்.
கொத்திக் கொத்தித் தின்கிறது.

பிறகு நிமிர்ந்து சிரிக்கிறது.
பின்னாற் திரும்பிப் பார்க்கிறது
சிறகைக் காற்றில் உதைக்கிறது.
சின்னக் குருவி பறக்கிறது.



# மண் விளையாட்டு


மண்விளையாடடா தம்பி
மண் விளையாட்டிது
பொன் விளையாட்டடா
மண் விளையாடடா தம்பி

மண்ணிற்குள் தானடா
பொன்னும் விளைவது
பொன்னைவிட மண்ணைப்
போற்றி செய்தாடடா
மண் விளையாடடா தம்பி.

மண்ணிலே நல்ல
வண்ணங்கள் செய்யலாம்
கண்ணுக்கினிய
கடவுளும் செய்யலாம்
மண் விளையாடடா தம்பி

உண்ணுங் கறிசோறு
மண்ணிலே செய்தாலும்
பங்கிட்டதன் ருசி
பார்க்க வேண்டுமடா

மண் விளையாடடா தம்பி
நல்ல மண் விளையாட்டிது
பொன் விளையாட்டடா
மண் விளையாடடா தம்பி.



# கண்ணென்றால் நாம் பார்க்கிறது



கண்ணென்றால் நாம் பார்க்கிறது.
காதென்றால் நாம் கேட்கிறது.
புண்ணென் றாலோ நோகிறது.
புழுவோ நெளிந்து போகிறது.

காலென் றால் நாம் நடக்கிறது.
கடகம் நாங்கள் இழைக்கிறது.
பாலென்றால் நாம் குடிக்கிறது.
பசுவென்றால் பால் கறக்கிறது.

கையென்றால் நாம் கொடுக்கிறது.
கதையென்றால் நாம் படிக்கிறது.
பொய்யென்றால் நாம் வெறுக்கிறது.
பொதியென்றால் நாம் சுமக்கிறது.

வாயென்றால் நாம் சிரிக்கிறது.
வடையென்றாலோ பிடிக்கிறது.
காயென்றாலோ பழுக்கிறது.
கனியென்றால் நாம் சுவைக்கிறது.

பல்லென்றால் நாம் கடிக்கிறது.
பாடம் வகுப்பில் நடக்கிறது.
நில்லும் நெடுகக் கதைக்கிறதோ?
நிறைய வேலை இருக்கிறது.


## நெல்லை ஒருவன் விதைக்கின்றான்


நெல்லை ஒருவன் விதைக்கின்றான்
நிறையச் சோறு படைக்கின்றான்
கல்லை ஒருவன் உடைக்கின்றான்.
வீடு கட்டி முடிக்கின்றான்.

பஞ்சை ஒருவன் நெய்கின்றான்.
பால்போல் ஆடை செய்கின்றான்.
அஞ்ச ஒருவன் வருகின்றான்,
அவனோ கல்வி தருகின்றான்

பேனை ஒருவன் பிடிக்கின்றான்.
பிஞ்சுப் பாடல் தொடுக்கின்றான்.
வானை ஒருவன் அளக்கின்றான்
மயிரை கூடப் பிளக்கின்றான்.

வீணை ஒருத்தி எடுக்கின்றாள்
வியக்கும் இசையை வடிக்கின்றாள்
தோணி ஒருவன் வலிக்கின்றான்
தொடர்ந்து மீனாய் இழுக்கின்றான்.

ஆலை ஒருவன் ஓட்டுகிறான்.
அதனாற் பயன்கள் காட்டுகிறான்.
பாலை நிலமும் இவராலே
பசுமை பெற்று நிற்கிறதே.



# மழையே, மழையே, பொழியாயோ?

மழையே! மழை! பொழியாயோ?
மாரி காலம் தெரியாயோ?
பிழையே பிழையே புரிவாயோ?
பெய்யுங் காலம் நினையாயோ?

முகிலே! முகிலே! கவியாயோ?
முழுநா ளும் நீர் சொரியாயோ?
பகலே! பகலே! குளிராயோ?
பச்சைக் காற்றே! வீசாயோ?

இடியே! இடியே! இடியாயோ?
இனி உன் மேளம் அடியாயோ?
செடியே! செடியே! மலராயோ?
செவ்வந் திகளே! சிரியீரோ?

குருவீ! குருவீ! நனையாயோ?
கொட்டும் மழையில் முழுகாயோ?
அருவீ! பெருகி வழியாயோ
அயலில் வயலில் நிறையாயோ?

பயிரே! பயிரே! நிமிராயோ?
பசியா வண்ணம் விளையாயோ?
வெயிலே! வெயிலே! விரையாயோ?
வேண்டாம் என்றால் அகலாயோ?

மழையே! மழை! பொழியாயோ?
மாரி காலம் தெரியாயோ?
பிழையே பிழையே புரியாயோ?
பெய்யுங் காலம் நினையாயோ?

## ஒற்றைப் பனை

ஒற்றைப் பனை ஒன்று
ஓலம் வைக்கும் நின்று।
வெட்ட வெளிக் காற்றில்
ஒற்றைப் பனை ஒன்று।


அப்பா அம்மா அற்ற
அனாதைப் பிள்ளை போல
ஒற்றைப் பனை ஒன்று
ஓலம் வைக்கும் நின்று।

ஒற்றைக் காலில் நின்று
ஒருவர் செய்யும் தவம் போல்
வெட்டவெளியை துளாவி
என்ன வரமோ கேட்கும்..?

விடுதலை பெற் றெவரும்
வாழ வரமே கேட்கும்
வறுமை நீங்கி மக்கள்
உயர வரமும் கேட்கும்

பஞ்சம் உற்ற போது
பழமும் பனாட்டும் வழங்கும்
என்றும் நிமிர்வு எமக்குள்
ஏற்றி உரமே சேர்க்கும்।

எங்கள் அன்னைத் தமிழின்
இயற்கைச் சின்னம் இதுவே।
அன்று தொட்டு வறுமை
அகற்றும் தெய்வத் தருவே।



# அகதிச் சிறுவர்

வானமெங்கும் வெள்ளிப்பூக்கள்
அள்ளிச் சூட ஆளில்லை
பூமியெங்கும் அகதிச் சிறுவர்
அள்ளி அணைக்க ஆளில்லை.

வெளியில் எங்கும் கிளிகள் பாடும்
கேட்டுச் சுவைக்க ஆளில்லை.
வழியில் தெருவில் மழலைப் பேச்சு
கேட்டு மகிழ ஆளில்லை.

கடலில் துள்ளும் மீன்கள் கூட்டம்
கண்டு களிக்க ஆளில்லை
படகில் அலையும் அகதிச் சிறுவர்
கரையும் சேர வழியில்லை.

உலகம் எங்கும் உயர்ந்தநீதி
போதனைக்குக் குறையில்லை.
இரவும் பகலும் வந்துபோகும்
அகதிச் சிறுவர்க் கொளியில்லை.





## பேர் மனிதர்

பூமி எங்கள் வீடு
வானம் அதன் கூரை
சூரியனும் நிலவும்
எங்கள் வீட்டின் ஜன்னல்

இரவு எங்கள் அன்னை
பகலோ எங்கள் தந்தை
இருவர் அன்பின் அணைப்பில்
எங்கள் வாழ்க்கை ஓடும்.

காற்றே எங்கள் பேச்சு
கடல்தான் நீச்சல் கேணி
நெருப்பே ஜீவ உயிர்ப்பு
நெஞ்சில் இறையின் இருப்பு

பேர் மனிதர் நாங்கள்
"பால்வழி" எம் பாதை
அண்டம் யாவும் சொந்தம்
பந்தம் எதிலும் இல்லை.



# ஊர்க்குருவி சொன்ன கதை

ஊர்க்குருவி ஊர்க்குருவி
நாட்டில் என்ன சேதீ
நாடு மிகவும் மோசம்
நான் சொன்னாப் பாவம்

தோப்புப் பக்கம் போனேன்
தோப்பெல்லாம் இரத்தம்
குஞ்செல்லாம் செத்து
கூடு சிதைஞ்சு கிடக்கு

செத்த குஞ்சுகளுக்கு
சிலுவை குத்திச் சூட்ட
பூப்பிடுங்கப் போனேன்
பூக்களெல்லாம் இரத்தம்


பூக்கழுவ வெண்டு
வாவிக்கரை போனேன்
வாவிக்கரையெங்கும்
வீங்கி வீறைச்சுக் கிடக்கு.

வீக்கமெண்ட வீக்கம்
விழிபிதுங்கும் வீக்கம்
காக்கத் துணையில்லை
கனதூரம் திரிஞ்சன்

தேசமெல்லாம் திரிஞ்சு
தோப்பின் கதை சொன்னேன்
தோப்பிழந்த குயில்கள்
துயரக் கதை சொன்னேன்

தோப்பின் கதை பொய்யோ
துயரக் கதை பொய்யோ
வாவிக் கதை பொய்யோ
வாடி மிக நொந்தேன்

நொந்த கதை சொல்வேன்
நூறு தேசம் செல்வேன்
வெந்த கதை சொல்வேன்
விடை கிடைக்கும் வரைக்கும்.



## வீடும் வெளியும்

வெளியில் அமைந்து வீடிருக்கும்
வீட்டுக்குள்ளும் வெளியிருக்கும்
இடைவெளியில்லா நெருக்கடியில்
என்னவிருக்கும் நீ சொல்லு.

இடைவெளியில்லா நெருக்கடியில்
பிரச்சினைகள் தான் தலைதூக்கும்
பிரச்சினை தீர்க்கும் நெருக்கடியை
பிள்ளைகள் எங்கள் தலை சுமக்கும்

பிரச்சினை தவிர்க்கும் பிள்ளைகளாய்
இருத்தல் சரியா நீயே சொல்
பிரச்சினை தீர்க்கும் வழிமுறைகள்
அறிதல் நலமா நீயே சொல்

பிரச்சினைகளை எதிர்கொள்ளும்
பேரறிவோடெழுதல் நலமாகும்
பேரறிவும் வழியும் இருந்தாலோ
பெருவெளியும் வீடும் வசமாகும்.



# நான் அரசன்

ஆடும் மாடும் என்தோழர்
வாலை ஆட்டும் நாய் தோழன்
பாடும் பறவை என் சொந்தம்
பச்சை மரங்கள் என் சுற்றம்

வீடும் வெளியும் என் ஆட்சி
வீசும் காற்று என் ஊர்தி
மோதும் அலைகள் என் குதிரை
முகிலின் பொதியில் என் படுக்கை.

அம்மா அப்பா என்கோட்டை
பள்ளித் தோழர் என் படைகள்
சும்மா இருப்பேன் சோறு வரும்
தூக்கிக் கொஞ்சும் நூறு கரம்.

மழையும் வெயிலும் என் தலையில்
மண்ணும் தூசும் என் உடையில்
இலையில் தூங்கும் "வண்ணாத்தி"
என்றால் எனக்குப் பெரும்வேட்டை.

பிறையைப் பிடித்துக் குழலூத
பெரிய ஆசை எனக்குண்டு
இரவில் மின்னும் மின்மினியை
எடுத்து மாலை நான் தொடுப்பேன்.

நான்தான் இந்த நாட்டரசன்
நாலும் மூன்றும் தெரிந்தவனாம்
வானை முட்டும் கோட்டை கட்டி
வாழும் பெரிய நாட்டரசன்

# படைப்பாளிகள் பற்றி.........

## மஹாகவி

''பாரதிக்குப் பிந்தியதோர் பெரிய கவியாற்றல்'' என்று குறிப்பிடப்படுகின்ற இவரது பல நூல்கள் வெளி வந்துள்ளன. வள்ளி , கோடை, வீடும் வெளியும், ஒரு சாதரண மனிதனது சரித்திரம், குறும்பா முதலானவை இவரது தொகுப்புகள். 1971இல் காலமான இவரது சொந்த ஊர் அளவெட்டி.

## மு.பொன்னம்பலம்

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'திசை' எனும் வாரந்தரியின் ஆசிரியராக இருந்த இவர் புங்குடு தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.
'அது' என்பது இவரது வெளி வந்த கவிதைத் தொகுதி. இலங்கையின் குறிப்பிடத்தக்க படைப்பாளியான இவர், மு.தளையசிங்கத்தின் சகோதரருமாவார்.

## சு.வில்வரத்தினம்

அகங்களும் முகங்களும், காற்று வெளிக் கிராமம் முதலான கவிதைத் தொகுப்பின் சொந்தக் காரரான இவர், தமிழின் சிறந்த கவிஞர்களுள் ஒருவர். புங்குடுதீவே இவரது பிறப்பிடம்.

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு -வள்ளுவன்

**கரவை A.C கந்தசாமி அவர்கள் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள நிலாவெளி எனும் இடத்தில் அறநெறிப் பாடசாலை ஒன்றுக்கு அடிக்கல் நாட்டியபின் ஆற்றிய உரையின் சாரம்சம்.**

அறநெறி பாடசாலை ஒன்றை ஆரம்பிப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். நான் அறநெறிக்கு மாறானவனோ, எதிரானவனோ அல்ல. எங்கள் வாழ்க்கையில் நாம் எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, மதங்கள் போதிப்பது ஒன்று. மதங்களின் நோக்கம் ஒன்று. மதங்கள், மனிதனை நல்வழிப்படுத்துவதற்காக பல நூறுவருடங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டது. மதத்தால் சொல்லப்படுகின்ற கருத்துக்கள், மனிதனை நல்வழிகாட்டி, மனிதனை மனிதனாக வாழ வைப்பதற்கு முயன்றனவேயொழிய மனிதனை அழிப்பதற்காகவல்ல. மனிதர்கள் மத்தியில் வேற்றுமைகளை உருவாக்குவதற்காக மதங்கள் உருவாக்கப்படவில்லை. ஆகவேதான், ''ஒன்றே குலம்; ஒருவனே தேவன்'' என்ற கோட்பாட்டை நாம், அடிக்கடி கூறிக்கொள்கின்றோம். ''அன்பே தெய்வம்'' என்று நாம் சொல்லுகின்றோம். அன்பு காட்டுவதுதான் தெய்வத்திற்கு நாம் செய்யும் சேவை.

ஆகவேதான் மனித உயிர்கள் இடத்திலே அன்பு காட்ட வேண்டும், என்ற அந்தக் கோட்பாட்டை, எமக்குப் போதனையாக முன்னோர்கள் வழங்கினார்கள். ஆனால் நாம் அவ்வாறாக போதிக்கப்பட்ட போதனைகளின்படி, எமது வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றோமா? என்பதுதான் எமக்குள்ள பிரச்சினை.

எம் மதங்கள், போதித்த அந்த நற்போதனைகளின்படி, எமது வாழ்க்கையில் எம்மால் கடைபிடிக்கமுடியவில்லை. ஏனெனில், யானைக்குப் பிடிக்கும் ''மதம்'' போல், மனிதனுக்கு மதங்கள் 'மதவெறியை'' ஊட்டுகின்ற ஒன்றாக மாற்றப்பட்டது. அன்புக்குப் பதிலாக, ''குரோதம்'' ''வேற்றுமை'' போன்றன சிலரின் சுயநலத்திற்காக மக்களின் மனதிலே தூவப்படுகின்றது.

மொழி என்பது, மனிதன் மற்றொரு மனிதனோடு, தனது கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள உதவுகின்ற ஒரு கருவி. ஆனால் அந்தக் கருவி, சிலரின் தனிப்பட்ட சுயநல நோக்கங்களுக்காக, அழிவுக்கான ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகின்றது. இதன் அர்த்தம் நாம் எமது அடிப்படை உரிமைகளை விட்டுக் கொடுப்பது என்பதல்ல. இதற்காக திருநாவுக்கரசர் பாடிய தேவாரமொன்றைக் கூற விரும்புகிறேன்.

''நாம் யாருக்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்''

இந்த வார்த்தைகள், உண்மைகளை எடுத்துரைப்பதற்கு எமக்கு உறுதுணையாக நிற்கின்றன.

கடந்த கால அழிவுகளினால், எமது சின்னஞ்சிறார்களின் வாழ்வு கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், தொடர்ந்தும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றது. ஆகவே, அந்தச் சின்னஞ்சிறார்களின் எதிர்கால வாழ்க்கையை செப்பனிட்டு, செழுமைப்படுத்தி வழிநடத்துவது எமது முக்கியமான கடமைகளில் ஒன்றாகும். இவ்வாறான அறநெறிப் பாடசாலைகளை ஆரம்பிப்பதன் மூலம், எமது எதிர்கால சந்ததியினரின் வாழ்வுக்கு வழிகாட்ட முடியும்.

இந்த பாடசாலைகளில், பணிசெய்யும் ஆசிரியர்கள் ஒரு உன்னதமான, மகாத்தான பணியை ஆற்றுகின்றனர். இச் சிறார்களுக்கு நல்வழி காட்டுவது மட்டுமல்ல, அவர்களின் உள்ளங்களிலே அன்பை மலரச் செய்வது அவர்களின் மனங்களில், வேற்றுமை, குரோதங்கள் உருவாகாது மற்றவர்களை மதித்து, நேசிக்கின்ற மனப்பான்மையை வளர்ப்பது போன்றவற்றுக்கான அடித்தளங்களை இடச் செய்வது, ஆகியன இவர்கள் ஆற்றவேண்டிய பணிகளுள் சிலவாகும்.

இன்று வளர்ந்து வருகின்ற சமுதாயம் யுத்தத்தினாலும், பல்வேறு வெளிநாட்டு தொடர்புகளினாலும், சீரழிந்து வருகின்ற ஒரு நிலைமையைக் காண்கின்றோம். மதுபோதை போதைப்பொருள் பாவனைகள் இளம் சமூகத்தினர் மத்தியிலும், ஆண், பெண் மத்தியிலும், பரவி வருகின்றது. இதனால், ஒரு ஆபத்தை எமது நாடு, எமது சமுதாயம் எதிர்கொள்கின்றது. ஆகவே, இவற்றிலிருந்து, எமது இளம் சிறார்களைப் பாதுகாக்க வேண்டியதும், அதற்கான பக்குவத்தை அவர்கள் மனதில் உருவாக்க வேண்டியதும், இவ்வாறான தீய பழக்கவழக்கங்களுக்கு உள்ளாகாமல், அவர்களை வளர்க்க வேண்டிய பொறுப்பும், இவ்வாறான அறநெறிப் பாடசாலைகளைச் சார்ந்தது என்றால் மிகையல்ல.

எமக்கு ஏற்பட்ட அழிவுகளை ஒரு ஆக்கத்திற்கான வழியாக மாற்றி, ஏனைய மக்களோடு சமத்துவ உரிமையோடும், சகோதர மனப்பான்மையோடும் வாழ்வதற்கு வழிகாட்டவும், அதற்கான பாதையை, இப் பாடசாலைகளில் பணியாற்றுபவர்களால், செப்பனிட முடியும். இதற்குப் பெற்றோர்களும் தங்களாலான உதவியையும், ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும். எமது பிள்ளைகள் சீரும் சிறப்புமாக வாழ்ந்தால் அது பெற்றோருக்கு பெரும் மகிழ்ச்சி தருகின்ற ஒன்று. திருவள்ளுவர் கூறியது போல,

''தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்.

காலத்தி னாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மானம் பெரிது -வள்ளுவன்

இந்நூல், கரவை A.C கந்தசாமி அவர்களுக்கு சமர்ப்பணம் செய்வதற்காகப் படைக்கப்பட்டது.

இப்படியான ஒரு எண்ணத்தைக் கூறிய என் மகள் ஜெயபாரதிக்கும் அதை நடைமுறைப்படுத்திய என் மகனுக்கும் முதல் நன்றிகள்.

இந்நூலை வெளியிட பொருளாதார உதவிகள் செய்த, என் குடும்ப நண்பர்களான மணிமாறன், சதீஸ், பிரபா, ஜெயக்குமார், வர்தீஸ்வரன் மற்றும் அன்புக்குரிய மருமகன் சற்குணத்திற்கும் மகள் ஈழபாரதிக்கும் மற்றும் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியினருக்கும் என் நன்றிகள்.

இந்நூலுக்குத் தமது பாடல்களை பிரசுரிப்பதற்கு அனுமதியளித்து தந்துதவிய ''மகாகவி'' குடும்பத்தினருக்கும், திரு.மு.பொன்னம்பலம் அவர்களுக்கும், திரு.அ.வில்வரத்தினம் அவர்களுக்கும் நன்றிகள்.

பாடல்களுக்கான படங்கள் வரைந்துதவிய எஸ்.டி.சாமி அவர்களுக்கும் படைப்பாளிகள் பற்றிய சிறு குறிப்பை இன்முகத்துடன் எழுதித்தந்த அ.இரவிக்கும் நன்றி.

முன் அட்டையை தெரிவு செய்த என் மருமகளுக்கும், அதை வெளியிட்ட, டி.பி.குணசேன நிறுவனத்தாருக்கும் நன்றிகள்.

மற்றும் இந்த நூல் சிறப்புற வருவதற்கு ஆலோசனைகள் தந்த சிவகுமார், தியாகு, இந்திரன், குரு, ஷகீப், றஸ்மி, சுரேஸ், தேன்மொழி மற்றும் ''சரிநிகர்'' நண்பர்கள் ஆகியோருக்கும், பல்வேறுவகையில் உதவி செய்த தங்கை சரோவிற்கும், திரு.செல்வரத்தினம் அவர்களுக்கும் நன்றிகள்.

கந்தசாமி அவர்களின் விபரங்களைத் தந்த திரு. ஆனந்த குமாரசாமி அவர்களுக்கும் நன்றிகள்.

இத்துடன் கரவை கந்தசாமி அவர்களின் உரையொன்றையும் இணைத்துள்ளேன்.

இந்நூலை அழகுறப் பதிப்பித்த 'டெக்னோ பிரின்ட்'' அழுத்தகத்தாருக்கும் தியாக கேசவனுக்கும் நன்றிகள்.

வசந்தாதேவி கந்தசாமி
*28.09.1995*